# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A./B.Sc./B. Com.** Degree (Semester) Examinations, April 2018

Part – IV : NME subject : Second Semester : Paper – I

## தமிழ் மொழித் திறன் அறிதலும் தமிழ் இலக்கிய வரலாறும்

Under CBCS – Credit: 2

Time: **2** Hours  Max. Marks: **75**

## பகுதி - அ

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளி: (10 × 1 = 10)**

1. தமிழர் திருநாள்
   அ) பொங்கல்  ஆ) தீபாவளி  இ) மொகரம்  ஈ) கார்த்திகை
2. வேலையாட்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் கருவி.
   அ) கணினி  ஆ) மேசை  இ) நாற்காலி  ஈ) கட்டில்
3. தமிழக சுற்றுலாத் தலங்களில் ஒன்று
   அ) ஊட்டி  ஆ) சிம்லா  இ) காஷ்மீர்  ஈ) லடாக்
4. சேமிப்பின் நன்மை
   அ) வளமான வாழ்வு  ஆ) சோகம்
   இ) பாவம்  ஈ) கஷ்டம்
5. வறுமை இல்லாமல் மனிதன் வாழ தேவையானது
   அ) சேமிப்பு  ஆ) சுகாதாரம்  இ) சண்டை  ஈ) கோபம்

**சுருக்கமாக விடையளி:**

6. பத்துப்பாட்டில் ஏதேனும் இரண்டினைச் சுட்டுக.
7. எட்டுத் தொகையில் ஏதேனும் இரண்டினைச் சுட்டுக.
8. நீதி இலக்கியங்களில் ஏதேனும் இரண்டினைச் சுட்டுக.
9. “யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் சிறந்தது வேறு எதுவும் இல்லை” யார் கூற்று?
10. இரட்டைக் காப்பியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

## பகுதி - ஆ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி: (4 × 10 = 40)**

11. அ) கணினி பற்றி குறிப்பு வரைக.
    **(அல்லது)**
    ஆ) சிற்றிலக்கிய வரலாறு - குறிப்பு வரைக.
12. அ) சுற்றுலா பற்றி எடுத்துரைக்க.
    **(அல்லது)**
    ஆ) இக்கால இலக்கிய வரலாறு - குறிப்பு வரைக.
13. அ) வல்லினம் மிகும் இடம் ஏதேனும் மூன்றினைச் சுட்டுக.
    **(அல்லது)**
    ஆ) பிழையின்றி படித்தல் - குறிப்பு வரைக.
14. அ) வல்லினம் மிகா இடம் ஏதேனும் மூன்றினைச் சுட்டுக.
    **(அல்லது)**
    ஆ) பிழை நீக்கி எழுதுதல் - குறிப்பு வரைக.

## பகுதி - இ

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:(2×12½ =25)**

15. தமிழர் திருநாள் - கட்டுரைக்க.
16. சேர்த்து எழுதுக:
    யானை + காது =
    பூனை + பார்வை =
    நீலம் + கடல் =
    புதுமை + கவிதை =
    உண்மை + செயல் =
    பூ + செடி =
17. ல, ள, ழ, ர, ற, ண, ன - வேறுபாட்டை உதாரணத்துடன் எழுதுக.
    (ஒவ்வொன்றுக்கும் இரண்டு மட்டும்)

**VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST**

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A./B.Sc./B. Com.** Degree (Semester) Examinations, April 2018

Part – IV : NME subject : Second Semester : Paper – II


# தமிழர் கலைகளும் தமிழ் இலக்கிய வரலாறும்

Under CBCS – Credit: 2

Time: **2** Hours Max. Marks: **75**

## பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: (10 × 1 = 10)**

1. பண்டைக் காலத்துக் கலைகளின் எண்ணிக்கை
   அ) பத்து ஆ) பதினொன்று
   இ) அறுபத்துநான்கு ஈ) ஒன்பது
2. அழகுக் கலைகளின் எண்ணிக்கை
   அ) ஐந்து ஆ) பத்து இ) ஏழு ஈ) எட்டு
3. சிற்பங்கள் ________ வகைப்படும்.
   அ) ஒன்று ஆ) இரண்டு இ) பத்து ஈ) ஏழு
4. ஓவியத்திற்கு ________ என்னும் பெயர் உண்டு.
   அ) ஓவியம் ஆ) படம் இ) சிற்பம் ஈ) கோபுரம்
5. சித்திர மாடத்துத் துஞ்சிய மன்னன்
   அ) நன்மாறன் ஆ) சோழன் இ) சேரன் ஈ) பல்லவன்

**சுருக்கமாக விடையளி**:

6. அழகுக் கலைகளின் வேறு பெயர்கள் யாவை?
7. அழகுக் கலையை விரும்பாத மனிதனை எவ்வாறு அழைக்க வேண்டும்?
8. பண்டைக்காலத்தில் இசைக் கலையில் வல்லவராய் இருந்த இனத்தவர் யார்?
9. இசைக்குரிய ஓசைகள் எத்தனை பொருள்களில் உண்டாகின்றன?
10. கட்டிடக் கலையில் 'குகைக் கோயில்' என்ற புதிய முறையை உண்டாக்கியவன் யார்?

## பகுதி - ஆ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: (4 × 10 = 40)**

11. அ) 'கலைகள்' பொருள் விளக்கம் தருக.

    **(அல்லது)**

    ஆ) 'கவின் கலைகள்' குறித்து எழுதுக.
12. அ) 'ஓவியக்கலை' குறித்துச் சுருக்கி எழுதுக.

    **(அல்லது)**

    ஆ) 'இசைக்கருவிகள்' குறித்து குறிப்பிட்டு எழுதுக.
13. அ) 'சிற்பக்கலை' குறிப்புரைக்க.

    **(அல்லது)**

    ஆ) 'குகைக்கோயில்' குறித்து எழுதுக.
14. அ) நாயக்கர் காலத்து ஓவியம் குறித்து எழுதுக.

    **(அல்லது)**

    ஆ) 'குரவைக் கூத்து' விளக்கி வரைக.

## பகுதி - இ

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:(2×12½ =25)**

15. அழகுக் கலைகள் ஐந்தினை விளக்கி வரைக.
16. கோயில் கலைகளில் 'மரக்கோயில்கள்' குறித்து விளக்குக.
17. நால்வகைச் சிற்ப உருவங்களை விரித்துரைக்க.

**P1LT21**

# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A./B.Sc.** Degree (Semester) Examinations, April 2018

Part – I : Tamil Subject : Second Semester : Paper – I

## இக்கால கதை இலக்கியமும், மக்கள் தகவலியலும்

Under CBCS – Credit 3

Time: **3** Hours Max. Marks: **75**

### பகுதி – அ

**சரியான விடையைத் தேர்வு செய்க: (10 × 1 = 10)**

1. பூ மலரும் காலம் சிறுகதையின் ஆசிரியர் யார்?
   அ) லட்சுமி ஆ) ஜி. மீனாட்சி
   இ) பாமா ஈ) தாமரை
2. 'வலி இல்லாத வழி" என்ற சிறுகதையில் வரும் தாத்தாவின் பெயர்
   அ) ராகுல் ஆ) நாராயணன்
   இ) வெங்கடாசலம் ஈ) கண்ணன்
3. 'வேரில் பழுத்த பலா" நாவலின் கதைக் களம் _________
   அ) கல்லூரி ஆ) கோயில் இ) அலுவலகம் ஈ) பேருந்துநிலையம்
4. சரவணனின் தங்கை பெயர் _________
   அ) கமலம் ஆ) விஜயா இ) பத்மா ஈ) வசந்தா
5. ஓரிதழ் தொடர்ந்து _________ வெளிவராவிட்டால் நின்று விட்டதாக கருதுவர்
   அ) எட்டு மாதங்கள் ஆ) ஒன்பது மாதங்கள்
   இ) பத்து மாதங்கள் ஈ) பன்னிரண்டு மாதங்கள்
6. பேட்டி ஒரு கலை அதற்கு அறிவும் அனுபவமும் வேண்டும் எனக் கூறியவர்
   அ) தாமஸ் ஆ) ஆர். இராமசந்திர ஜயர்
   இ) ஹோஹன்டர்க் ஈ) எலியட்
7. ஒரு செயலை குறிப்பாக உணர்த்துவது?
   அ) பெயர் சொல் ஆ) தெரிநிலை வினைமுற்று
   இ) ஏவல் வினைமுற்று ஈ) குறிப்பு வினைமுற்று
8. கீழ்க்கண்டவற்றுள் பண்புத்தொகை எது?
   அ) ஊறுகாய் ஆ) நன்கலம் இ) பொற்கொடி ஈ) இரவு பகல்
9. தமிழ்ச்சிறுகதையின் தந்தை யார்?
   அ) புதுமைப்பித்தன் ஆ) ஜெயகாந்தன்
   இ) வ.வே.சு. அய்யர் ஈ) வீரமாமுனிவர்
10. Manager என்பதன் தமிழ் சொல் யாது?
    அ) அலுவலர் ஆ) தலைமையர் இ) மேலாளர் ஈ) ஆணையர்

### பகுதி –ஆ

**ஒரு பக்க அளவில் விடையளிக்க: (5 × 7 = 35)**

11. அ) ஒரு பங்களாவும் சில மனிதர்களும் சிறுகதை காட்டும் சமூக வேறுபாடுகளை விளக்குக.
    **(அல்லது)**
    ஆ) ஒரு மழைக்காலம் சிறுகதை உணர்த்தும் கருத்தினை எழுதுக.
12. அ) வேரில் பழுத்த பலா நாவல் சுட்டும் அலுவலகச் சூழல் குறித்து விவரிக்க.
    **(அல்லது)**
    ஆ) அன்னம் பாத்திரப்படைப்பினை நாவல் வழி விளக்கு.
13. அ) செய்தித்தாள் நிர்வாக அமைப்பில் ஆசிரியர் பிரிவு பற்றி தொகுத்தெழுதுக.
    **(அல்லது)**
    ஆ) செய்தியாளர் இயல்புகள் யாவை?
14. அ) பெயர்ச்சொல் சான்றுடன் விளக்குக?
    **(அல்லது)**
    ஆ) "விடை" வகைகளைச் சான்றுகளுடன் குறிப்பிடுக.
15. அ) சிறுகதையின் பிற்கால வளர்ச்சி குறித்து எழுதுக.
    **(அல்லது)**
    ஆ) கீழ்க்கண்ட சொற்களின் வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.
    1. கெடுவான், 2. பிறந்தார், 3. வந்தான், 4. பார்வை,
    5. படிப்பு, 6. கண்டு, 7. நின்றார்

### பகுதி - இ

**எவையேனும் மூன்றனுக்கு மூன்று பக்க அளவில் விடையளிக்க: (3 × 10 = 30)**

16. "பூ மலரும் காலம்" சிறுகதைத் தொகுப்பில் காட்டப்பெறும் பெண்களின் நிலை குறித்துக் கட்டுரை வரைக.
17. சரவணனின் நேர்மைப் பண்பு வேரில் பழுத்த பலா நாவலில் எங்ஙனம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
18. போட்டியின் வகைகளை பற்றி விவரிக்க.
19. தொகைகளை சான்றுடன் நிறுவுக.
20. புதின இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக.

P1LT41

# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A./B.Sc.** Degree (Semester) Examinations, April 2018

Part – I : Tamil Subject : Fourth Semester : Paper – I

**சங்க இலக்கியமும் நீதி இலக்கியமும்**

Under CBCS – Credit 3

Time: **3** Hours Max. Marks: **75**

## பகுதி – அ

**சரியான விடையைத் தேர்வு செய்க: (10 × 1 = 10)**

1. விரிச்சி என்பதன் பொருள்
   அ) காலை ஆ) பசு இ) நற்சொல் கேட்டல் ஈ) தீமை
2. முல்லைப் பாட்டின் அடிவரையறை
   அ) 105 ஆ) 104 இ) 103 ஈ) 102
3. முகை என்பதன் பொருள் யாது?
   அ) மலர் ஆ) அரும்பு இ) மரம் ஈ) தேன்
4. தீயினுள் தெறலாக விளங்குபவன்
   அ) சிவன் ஆ) திருமால் இ) முருகன் ஈ) பிரமன்
5. அடுத்தது காட்டும் _________ போல் நெஞ்சம்
   அ) கல் ஆ) காகிதம் இ) கண் ஈ) பளிங்கு
6. அறியாமையை நீக்கும் மருந்து
   அ) நட்பு ஆ) தந்தை இ) மிளகு ஈ) கல்வி
7. அகத்திணைகள் எண்ணிக்கை _________
   அ) 7 ஆ) 8 இ) 9 ஈ) 10
8. ஆநிரைகளை மீட்கும் புறத்திணை பெயர்
   அ) வெட்சி ஆ) கரந்தை இ) வஞ்சி ஈ) காஞ்சி
9. எட்டுத்தொகை நூல்களுள் புறநூல் எத்தனை?
   அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4
10. சிறுபஞ்சமூலம் இயற்றியவர் யார்?
    அ) கபிலர் ஆ) வள்ளுவர் இ) காரியாசன் ஈ) நல்லாதனார்

## பகுதி –ஆ

**ஒரு பக்க அளவில் விடை அளிக்க: (5 × 7 = 35)**

11. அ) பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்கும் விதத்தினை முல்லைப் பாட்டின் வழி விளக்குக?

    **(அல்லது)**

    ஆ) பாசறையில் வீற்றிருந்த மன்னனின் மனநிலையைப் புலப்படுத்துக.
12. அ) நற்றிணையில் இடம் பெறும் பாலைத் திணைப்பாடலின் கருத்தினை எழுதுக.

    **(அல்லது)**

    ஆ) வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் கூறியவற்றை அகநானூற்றின் வழி எடுத்துரைக்க.
13. அ) காலமறிதல் சிறப்புக்களை திருக்குறள் வழி விவரிக்க.

    **(அல்லது)**

    ஆ) கல்வியின் மேன்மையினை பழமொழி நானூறு எங்ஙனம் எடுத்துரைக்கின்றது.
14. அ) கருப்பொருள் குறித்து எழுதுக.

    **(அல்லது)**

    ஆ) உள்ளுறை குறித்து விவரிக்க.
15. அ) நீதி இலக்கியத்தில் அறநூல்கள் குறித்து விளக்குக.

    **(அல்லது)**

    ஆ) கே. பாலசந்தர் திரைப்படங்களின் புதுமைகளை பட்டியலிடுக.

## பகுதி -இ

**எவையேனும் மூன்றனுக்கு மூன்று பக்க அளவில் விடையளிக்க:**

**(3 × 10 = 30)**

16. முல்லைப்பாட்டில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகளைத் தொகுத்தெழுதுக.
17. புறநானூற்று பாடல்களின் சிறப்புக்களை ஆய்க.
18. நாலடியார் உணர்த்தும் கல்வி பற்றி கட்டுரை வரைக.
19. புறத்திணைகள் விவரிக்க.
20. பத்துப்பாட்டு நூல்கள் குறித்து கட்டுரை வரைக.